# ஜீலை 14 - புனித கமில்லஸ் தெ லெல்லிஸ் (1550-1614)

இவர் இராணுவத்தில் சேர்ந்து துர்வாழ்க்கை நடத்தியதால் வெளியேற்றப்பட்டார். இருந்த பணத்தையெல்லாம் சூதாட்டத்தில் தோற்று கூலி வேலை செய்யத் தொடங்கினார். ஒரு சந்நியாச மடத்தில் வேலை செய்யும் போது சந்நியாசி ஒருவர் சொன்ன புத்திமதிகளைக் கேட்டு மனந்திரும்பினார். இருமுறை சந்நியாச ஆடையைப் பெற்றுக் காலில் வந்த புண்ணை ஆற்ற முடியவில்லை. பின் அவர் உரோமைக்குச் சென்றார். குணப்படுத்த முடியாத நோயாளிகளுக்கென்று தொடங்கப்பட்டிருந்த மருத்துவமனையின் சேர்ந்து நோயாளிகளுக்கு சிறந்த சேவை செய்து வந்தார். இவரது சேவையைக் கண்ட அதிகாரிகள் மருத்துவமனையின் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்து விட்டார்கள். நோயாளிகளின் ஊழியனாக இவர் தம்மை மதித்து தாழ்ந்த வேலைகளையும் செய்து வந்தார்.

குருப்பட்டம் பெற்றால் நோயாளிகளுக்குச் சிறந்த சேவை செய்யலாம் என்று இவர் உணர்ந்து 32-ஆம் வயதில் பள்ளிக்குச் சென்று சிறுவர்களுடன், இலத்தின் மொழியைக் கற்றார். குருப்பட்டம் பெற்றப்பின் நோயாளிகளை பராமரிப்பதற்கென்று ஒரு சந்நியாச சபையை ஏற்படுத்தினார். இவர் நோயாளிகளையும், முக்கியமாக சாகுந்தறுவாயில் இருந்தவர்களையும் வெகு அன்புடன் கண்காணித்து வந்தார். ஒருமுறை ஒரு நோயாளி இவரைப் பார்த்து “தயவு செய்து என் படுக்கையைச் சரிப்படுத்துங்கள்” என்றான். இவரோ அவனை நோக்கி “அப்படி பேசாதே நான் உன்னுடைய வேலையாள். எனக்கு நீ கட்டளைகள் பிறப்பிக்க வேண்டும். கெஞ்சிக் கேட்கக் கூடாது” என்றார். சாகக் கிடந்தவர்கள் இவருக்கு மனமார நன்றி சொல்லி இவரை வாழ்த்துவார்கள். அப்பொழுது இவர், “இதே போல் எனக்கும் பாக்கியமான சாவு கிடைக்கவேண்டும்” என்பார். அந்த வரம் இவருக்கு கிடைத்தது. இவர் மரணப் படுக்கையில் இருந்தபோது சுற்றிலும் சந்நியாசிகள் நின்று செபித்துக் கொண்டிருந்தார்கள். “இனிய முகத்தோடு இரட்சகர் உங்களை எதிர்கொண்டு வருவாராக” என்னும் சொற்கள் அவர்கள் சொல்லும் போது அவரது உயிர் உடலை விட்டு நீங்கியது.




<u>**சிந்தனை:**</u> இறக்கிறவர்கள் நல்லவர்களாக இறக்க உதவி செய்தால் நமக்கு நிச்சயமாக பாக்கியமான மரணம் கிடைக்கும்.

<u>**செபம்:**</u> நித்தய பிதாவே, இறக்கிற பாவிகள் மனந்திரும்ப இயேசுவின் திரு இருதயத்தை உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்.